
விலை ரூ. 30/=

10 ஜூன் 2025 செவ்வாய்க்கிழமை

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 06   இதழ் : 161   பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

### பெருமளவு சிங்கள மக்களை விகாரைக்கு அழைத்துவர முன்னேற்பாடு

# தையிட்டியில் இன்று மக்கள் போராட்டம்!

- கலகமடக்குவதற்கு பொலிஸார் குவிப்பு
- கஜேந்திரகுமார் உட்பட 27 பேருக்கு தடை

யாழ்ப்பாணம், ஜூன் 11

**பொசன் பௌர்ணமி வழிபாட்டுக்காக அதிகளவான சிங்கள மக்கள் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அழைத்து வரப்படவுள்ளனர் என்று தகவல்கள் வெளியான நிலையில், அந்த விகாரையை அகற்றுமாறு கோரி இன்றைய தினமும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.**

11

## சட்டவிரோத மதத் தலங்களுக்கான ஆன்மீக பயணங்களை தவிருங்கள்

### தையிட்டி விகாரைக்கு வருவோரிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

அத்துமீறி அடுத்தவர் காணிகளுக்குள் கட்டப்படுகின்ற மத தலங்களில் ஆன்மீகத்தை தேடுவது அர்த்தமற்றதும் அநியாயமானதும் என்பதை புரிந்து கொண்டும், வட, கிழக்கு மாகாணங்களில் சட்ட விரோத இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மத வழிபாட்டுத் தலங்களை நோக்கிய தங்களின் ஆன்மீக பயணங்கள் வேதனையளிக்கிறது. நல்மனதோடு அவற்றை தவிர்த்து, தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரித்து, அவர்களுக்குரிய காணிகளை மீள ஒப்படைக்க முயற்சிப்பதும் உங்களுடைய கடமை என்பதையும்

11

## ஐந்து பேர் தமிழகத்தில் தஞ்சம்

கொழும்பு, ஜூன் 10

இலங்கையின் மத்திய மலைநாட்டிலிருந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கண்டியைச் சேர்ந்த 43 வயதுடைய எம். மொஹமட் கியாஸ், அவரது மனைவியான 34 வயதுடைய எம். பாத்திமா பர்ஹானா ஆகியோரும், 12 மற்றும் 4 வயதுடைய அவர்களது மூன்று பிள்ளைகளுமே தமிழ்நாட்டில் பொருளாதார தஞ்சம் கோரியுள்ளனர்.

படகு மூலமாக இலங்கையிலிருந்து பயணித்த இவர்கள், நேற்று அதிகாலை இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடிக்கு இடையேயான கரையில் இறக்கிவிடப்பட்டனர் என்று தமிழக பொலிஸ் தெரிவித்துள்ளது.

மோசமான பொருளாதார நிலைமை காரணமாக தாங்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்றும் குறித்த

11

## தமிழ் அரசு கட்சியின் யாழ். மேயர் மதிவதனி?



யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மாநகர சபையின் மேயர் பதவிக்குத் திருமதி விவேகானந்தராஜா மதிவதனியை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை, யாழ். மாநகர சபையின் துணை மேயர் பதவிக்கு இம்மானுவேல் தயாளன் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

நல்லூரில் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரனின்

11

## டக்ளஸை தேடி சிவஞானம் சென்றது நல்லதொரு விடயம்

### இனி நாம் அனைவரும் சேர்ந்து செயல்படுவோம் என்கிறார் கருணா

மட்டக்களப்பு, ஜூன் 10

சிவஞானம் துணிந்து சென்று டக்ளஸுடன் பேசி ஆட்சி அமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டமையை வரவேற்கின்றோம். இது நல்லதொரு விடயம். இதுபோன்று எதிர்காலத்தில் நாங்கள் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து செயல்படவேண்டும் என்பதுதான் எங்களது வேண்டுகோள் என முன்னாள் பிரதி அமைச்சரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவருமான கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான சி. சந்திரகாந்தன், எஸ். வியாழேந்திரன், முன்னாள் பிரதி அமைச்சர் வி. முரளிதரன் ஆகியோர்

11

## மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்ற சாவகச்சேரி வர்த்தகர் கைது

### மூன்று மாணவர்களும் பொலிஸாரிடம் சிக்கினர்

தென்மராட்சி, ஜூன் 10

சாவகச்சேரி நகரில், நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரை விற்பனை செய்துவந்த வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகர் பகுதியில், பாடசாலை மாணவர்கள் சிலர் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வருவதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் கீழ் இயங்கும் போதைப் பொருள் குற்றச்செயல் தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினருக்கு கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமைவாக, சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலையின்

11

## யாழ்ப்பாணத்தில் நடப்பதை பொறுத்தே வன்னியில் தமிழ் அரசும் நடந்துகொள்ளும்

### ரெலோவிடம் கூறினார் சீ. வீ. கே. சிவஞானம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களை அமைப்பது தொடர்பில் யாழ். மாவட்டத்தில் ரெலோ உட்பட ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி எவ்வாறு நடந்து கொள்கின்றதோ, வன்னி தேர்தல் மாவட்டத்தில் அதே பதில் முறைமையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் நடந்துகொள்ளும் என்று தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களை அமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே.சிவஞானம்,

11

## பணி இடைநிறுத்தப்பட்ட சிறை ஆணையாளர் கைது



கொழும்பு, ஜூன் 10

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய குற்றப் புலனாய்வுத் துறையினரால் நேற்றிரவு கைது செய்யப்பட்டார்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பை பயன்படுத்தி கைதி ஒருவரை சட்டவிரோதமாக விடுதலை செய்தார் என்று எழுந்த குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ்

11

### காணி சுவீகரிப்பு வர்த்தமானி இரத்து:

## காணி அமைச்சருடன் பேசி திகதி அறிவிக்கப்படும்

### கஜேந்திரகுமாருக்கு நீதி அமைச்சர் பதில்

கொழும்பு, ஜூன் 10

வடக்கு காணிகள் தொடர்பான வர்த்தமானி இரத்துச் செய்யப்படும் திகதி தொடர்பில் காணி அமைச்சர் லால்காந்தவுடன் கலந்துரையாடிய பின்னர் அறிவிப்பதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகள் 3 மாத காலத்துக்குள்

11

## ரணில் சி. ஐ. டி.யில் நாளை முன்னிலையாவார்



கொழும்பு, ஜூன் 10

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை புதன்கிழமை குற்றப் புலனாய்வு துறை பணிமனையில் முற்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மருந்துகள் இறக்குமதி தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அளித்த முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காகவே அவர் சி. ஐ. டி.யில் முற்படவுள்ளார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) தேர்த் திருவிழா நேற்று திங்கட்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றபோது...! (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# சித்தர்களின் புனித பூமியில் குப்பைகளை கொட்டாதே!

## யாழ். மாவட்ட செயலகம் முன் போராட்டம்




யாழ்ப்பாணம், ஜூன் 10

காரைக்கால் திண்ம கழிவ கற்றல் நிலையத்துக்கு எதிராக யாழ்.மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை காலை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, "சட்டவிரோதமாக திண்மக் கழிவகற்றல் அமைக்கப்பட்டு இரசாயன இலத்திரனியல் மருத்துவ கழிவுகளை வகைப்படுத்தாது தீயிட்டுக் கொழுத்தப்படுவதால் சூழல் மாசடைவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கவலை தெரிவித்தனர்.

அத்துடன், குறித்த பகுதி "சித்தர்கள் பலர் வாழ்ந்து சமாதியடைந்த இடமாகக் கருதப்படுவதாகவும், சமாதி கோவில், ஈழத்து சிதம்பரம் என அழைக்கப்படும் காரைக்கால் சிவன் கோவில் ஆகியன இங்கு காணப்படுகின்றன எனவும் இப் புண்ணிய பூமியிலேயே இவ்வாறு கழிவுகள் கொட்டப்படுகின்றன எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும் குறித்த பகுதியில் இருந்து கழிவகற்றல் நிலையத்தை அகற்றுமாறு பல வருடங்களாக கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் இது வரையில் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். (அ)

# அரச வருமானம் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 10

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள தரவுகளின் படி, 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரச வருவாயில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூ. 1,218.07 பில்லியனாக இருந்த அரசாங்க வருவாய் மற்றும் மானியங்கள், 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூ. 236.60 பில்லியனால் அதிகரித்து ரூ. 1,454.67 பில்லியனை எட்டியுள்ளன.

இது 19.42 வீத வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. குறிப்பிடத்தக்க வகையில், 2025 ஏப்ரலில் மாத்திரம் ரூ. 463.19 பில்லியன் வரி வருவாய் பதிவாகியுள்ளது.

இந்த வருவாய் அதிகரிப்புக்கு அந்த மாதத்தில் வாகன இறக்குமதிகள் மீண்டும் திறக்கப்பட்டதே ஒரு காரணம்.

இதற்கிடையில், 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் இறுதியில் நாடு ரூ. 532.73 பில்லியன் முதன்மை கணக்கு உபரியைப் பதிவு செய்தது.

இருப்பினும், அதே காலகட்டத்தில் ஒட்டுமொத்த பட்ஜெட் பற்றாக்குறை ரூ. 261.61 பில்லியனாக இருந்ததாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# போலியான வாசனை திரவியம் விற்பனை; பாவனையாளர் அதிகார சபை சோதனை

கொழும்பு, ஜூன் 10

ராஜகிரிய பகுதியிலுள்ள பிரபலமான கடைகளில் போலியாகத் தயாரிக்கப்பட்ட வாசனைத் திரவியங்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்பது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபை சோதனை நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

அவுஸ்திரேலியா மற்றும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகத் தெரிவித்து, ஒன்லைனிலும் பிரபலமான சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாகவும் வாசனைத் திரவியங்கள் விற்பனை செய்யப்படுவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அதனையடுத்து ராஜகிரியவில் உள்ள இரண்டு பிரபல நிறுவனங்களில் பாவனையாளர் அதிகார சபை சோதனையை மேற்கொண்டது.

இருப்பினும், இந்த தயாரிப்புகளின் தோற்றத்தை சரி பார்க்க விற்பனையாளர்களால் செல்லுபடியாகும் ஆவணங்களை சமர்ப்பிக்க முடியவில்லை.

மேலும், விசாரணைகள் நடந்து வருவதாகவும், விசாரணை முடிவில் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாவனையாளர் அதிகார சபை உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

# போதை மாத்திரையுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 10

9,657 போதை மாத்திரைகளுடன் பெண் உள்ளிட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குருநாகல் - மாவத்தகம பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையை தொடர்ந்து வாரிய பொலவை சேர்ந்த பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

சம்பவத்தில் 25, 37 வயதுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

# இலவச யோகா பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

உலக சமாதான ஆலயத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள இலவச யோகக்கலை பயிற்சி வகுப்புக்கள் மல்லாகத்தில் அமைந்துள்ள முகிழம் கலையகத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3.30 மணி முதல் ஆரம்பமாகி தொடர்ந்து சுமார் மூன்று மாதங்கள் நடைபெறவுள்ளன.

இங்கு நடைபெறவுள்ள பயிற்சி வகுப்புகளில், யோகக் கலை பற்றியதான விளக்கமும், நோய்கள் குணமாக என்னென்ன யோகாசனங்களை மேற்கொள்ள வேண்டும். என்பது தொடர்பிலும் யோகக்கலையுடன் தியானப் பயிற்சியை மேற்கொள்வது தொடர்பிலும் விரிவான விளக்கங்கள், பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்த பயிற்சி வகுப்பில் சிறியவர் முதல் பெரியவர் வரை இரு பாலரும் கலந்து கொள்ளலாம். பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள நாட்டமுள்ளவர்கள் 077 312 8651 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)


# புங்குடுதீவு கடற்கரையில் நேற்று கரையொதுங்கியது திமிங்கிலம்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

புங்குடுதீவு கடலில் திமிங்கிலம் ஒன்று நேற்று கரையொதுங்கியுள்ளது.

முற்பகல் 11.45 மணியளவில் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவு கடற்கரையில் 15 அடி நீளமுள்ள குறித்த திமிங்கிலம் இறந்து கரையொதுங்கியது.

குறித்த திமிங்கிலம் உயிரிழந்தமைக்கான காரணம் தெரியவராத நிலையில் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)



# 25,055 டெங்கு நோயாளர் 6 மாதங்களில் அடையாளம்!

கொழும்பு, ஜூன் 10

இந்த வருடத்தின் நேற்று முன்தினம் வரை 25,055 டெங்கு நோயாளர்கள், அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரம், டெங்கு நோயினால் 13 பேர் உயிரிழந்தனர் என்றும் அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் நிலவிய மழையுடனான காலநிலையை அடுத்து நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் டெங்கு நோயினால் 25 வீதமான மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில், காய்ச்சல், வாந்திபேதி ஏற்படுமிடத்து வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில், டெங்கு பெருக்கம் உள்ள இடங்களைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு, உரியப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 03.06.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மனித புதைகுழிகள்

அரியாலை மனிதப் புதைகுழியிலிருந்து 19 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனக் கூறப்பட்டுள்ளது. இலங்கை தீவின் விசாரணைகள் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் எப்போதுமே நம்பிக்கை கொள்வதில்லை. தவிர, பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளக்கூடியவாறான சூழலையும் அரசாங்கங்கள் இதுவரையில் கட்டியெழுப்பவில்லை. இதற்கு முன்னரும் இவ்வாறான மனிதப் புதை குழிகள் தொடர்பில் உரையாடப்பட்டிருக்கின்றன. விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று கூறப்பட்டது. ஆனால், பின்னர் அவற்றுக்கு என்ன நடந்தது என்னும் கேள்விக்கு பதில் இல்லை.

இறுதி யுத்தத்தின்போது கொல்லப்பட்டவர்கள் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான கேள்விகள் தொடர்ந்தாலும் அவற்றுக்கு உரிய பதிலை முறையாக அரசாங்கம் இதுவரையில் வழங்கவில்லை. இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சில விடயங்களில் நேர்மையாக இருக்கும் என்னும் எதிர்பார்ப்பு ஆரம்பத்தில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்தது உண்மை. ஆனால், தற்போது அந்த நம்பிக்கை படிப்படியாகக் குறைவடைந்து விட்டது. உள்ளூராட்சித் தேர்தலின்போதான தமிழ் மக்களின் வாக்களிப்பு இதனை உணர்த்தியிருந்தது.

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும்கூட, பொறுப்புக்கூறல் விடயங்களில் சிறிதளவு முன்னேற்றம் கூட வெளிப்படவில்லை. பொறுப்புக்கூறலை வலியுறுத்தினால், அதனடிப்படையில் சில விடயங்களை முன்னெடுத்தால், தென்பகுதியில் சிங்கள தேசியவாதிகள் பலமடைந்து விடுவார்கள் என்னும் அரசியல் பூச்சாண்டியே காண்பிக்கப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தியும் இந்த விடயத்தில் அச்சம் கொண்டிருப்பதாகவே தெரிகின்றது. கடந்த பதினைந்து வருடங்களில் ஒப்பீட்டிப்படையில், ரணில்-மைத்திரி அரசாங்கம் மட்டுமே சில விடயங்களில் முன்னோக்கி நகர்வதற்கான ஆர்வத்தைக் காண்பித்திருந்தது. அதற்கு ரணிலின் தலைமைத்துவமே பிரதான காரணம். ஆனாலும் அப்போதும்கூட ஒரு கட்டத்துக்கு மேல் நகர முடியவில்லை.

இறுதி யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. இதனை பாதிக்கப்பட்டவர்களும் உணராமல் இருக்க முடியாது. ஆனால், பாதிக்கப்பட்டவர்களின் கேள்வியோ வேறு. அதாவது, தங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது? எனவே, இனியும் தேடாதீர்கள் - அவர்கள் இல்லை என்னும் பதிலை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கங்கள் வெளிப்படையாக நடந்து கொள்ளாமையினால்தான், இந்த விடயம் தொடர்ந்தும் ஒரு பேசுபொருளாக இருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த விடயத்தில் ஒரு தெளிவான செய்தியை வெளிப்படுத்தலாம். இவ்வாறான புதைகுழிகள் கண்டு பிடிக்கப்படுவதற்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் தொடர்புகள் இருக்கின்றனவா என்னும் கோணத்திலும் அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு யுத்தத்தோடு நேரடித் தொடர்பில்லை. யுத்தம் அவர்களால் வழிநடத்தப்படவும் இல்லை. ஆனால், ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் என்னும் வகையில் முன்னைய ஆட்சியாளர்களின் தவறுகளுக்கு முற்றுப்புள்ளியிட வேண்டிய கடப்பாட்டை அவர்கள் தட்டிக்கழிப்பது சரியானதோர் அரசியல் அணுகுமுறையாக இருக்க முடியாது.

# வற்றாப்பளை பொங்கல் நேற்று





முல்லைத்தீவு, ஜூன் 10

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று இடம்பெற்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரை, பாற்செம்பு, காவடி, தீச்சட்டி பாதயாத்திரை என பல்வேறு வகையான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

இந்நிலையில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினர் ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்புக்காக கடமையில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தினர் சுகாதார நடவடிக்கையை மேற்கொண்டனர்.

(அ)

# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்



யாழ்ப்பாணம், ஜூன் 10

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பில் போட்டியிட்டு யாழ்.மாவட்ட பிரதேச சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 46 உறுப்பினர்கள் நேற்று கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையத்தில் முற்பகல் 11 மணியளவில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

பிரதேச சபை மற்றும் நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் தமது சத்தியப் பிரமாண உரையாக “கொடிய யுத்தத்தில் உயர் நீத்த பொதுமக்கள் சாட்சியாக! இந்த மண்ணின் விடுதலைக்காக உயிர் நீத்த அனைத்து போராளிகள் சாட்சியாக! இவ் மண்ணிக்காக உயிர் நீத்த அரசியல் தலைவர்கள் சாட்சியாக! என தொடங்கி இந்த மண்ணிற்கும் மக்களுக்கும் நாம் கொண்ட கொள்கைக்கும் எந்த சந்தர்ப்பத்திலும் பங்கம் விளைவிக்காத வகையில் மாநகர சபை நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களாகிய எமது செயற்பாட்டை வழங்குவோம்”என உறுதி கூறினர்.

இந்த சத்தியப்பிரமாண நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் முக்கியஸ்தர்கள் மற்றும் கட்சியின் தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# கால்நடை மருத்துவர்கள் வேலைநிறுத்தம்

கிளிநொச்சி, ஜூன் 10

கால்நடை வைத்தியர்கள் மேற்கொண்டுள்ள பணிப்புறக்கணிப்பால் கிளிநொச்சி மாவட்டத்தின் அரச கால்நடை சேவைகள் பாதிக்கப்பட்டன.


கால்நடை வைத்தியர்களுக்கான தனியான யாப்பை அரசாங்கம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட அதனை தடுக்கும் முயற்சியில் விவசாய அமைச்சர் ஈடுபடுவதாக தெரிவித்து அரச கால்நடை வைத்தியர்கள் நேற்று காலை 6.00 மணி முதல் 24 மணி நேர பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய 4 கால்நடை வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் கால்நடை வைத்தியர்கள் சமூகம் அளிக்காமையால் கால்நடை வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டன.

இந்த நிலையில் கால்நடைகளை சிகிச்சைக்காக அழைத்துச் சென்றவர்கள் சிகிச்சையை பெற முடியாமல் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாம லேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்**
புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். மனைவி வழியில் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் கூடு தல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்களுக்கு உதவு வீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**மிதுனம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள் . வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதி காரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**கடகம்**
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்த னையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங் கள் கை ஓங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாய மும் உண்டு. வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்க மாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பழைய பிரச்னைகள் தீரும். லாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்ச னங்களுக்கும் கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். யாருக்கும் பணம் நகைவாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். நேர்மறைஎண்ணங்கள்தேவைப்படும்.

**தனுசு**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையா ளுங்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறு பாடுகள் வந்து நீங்கும். உடல்அசதி, சோர்வு வந்து விலகும். விவாதம்வரக்கூடும். உழைக்க வேண்டும்.

**மகரம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியைபைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோ கத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.


**கும்பம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமை யும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

# வவுனியாவில் வீட்டிலிருந்து 10 கிலோ கஞ்சா கைப்பற்றல்

வவுனியா, ஜூன் 10
வவுனியாவில் வீட்டில் மறைந்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 10 கிலோ கஞ்சாவை மீட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது வவுனியா, கதிரவேல் பூவரசங்குளம் பகுதியில் உள்ள வீட்டிலிருந்து 10 கிலோ கஞ்சாவை கைப்பற்றியதுடன், 45 வயதுடைய ஒருவரை கைது செய்து ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ- 10)

# சட்டத்தரணிக்கு எதிராக அவதூறு யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10
சட்டத்தரணி ஒருவர் குறித்து பொய்யான தகவல்களுடன் அவருடைய படத்தை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு அவதூறு பரப்பிய குற்றச்சாட்டில் நபர் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இணுவில் பகுதியைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் போலி உறுதிகளை நிறைவேற்றியதாக அவரது படத்துடன் சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பியமை தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், குறித்த சமூக வலைத்தள கணக்கு உரிமையாளரை பொலிஸ் நிலையம் அழைத்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், சமூக வலைத்தளத்தில் சட்டத்தரணி தொடர்பில் பதிவிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்களை சமர்ப்பிக்க கோரியிருந்தனர்.

ஆதாரங்களை சமர்ப்பிக்கத் தவறியமையால் அந்த நபரை கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

# நள்ளிரவில் திடீர் சோதனை ஐஸ் போதைப்பொருள் மீட்பு

## கிளிநொச்சியில் இளைஞன் கைது

கிளிநொச்சி, ஜூன் 10
கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருவையாறு பகுதியில் நள்ளிரவு11. 20 மணியளவில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேக நபரின் வீட்டு வளாகத்தில் கைவிடப்பட்ட சாக்கு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 31 கிராம் 300 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது. இதனையடுத்து குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(எ)

# “யாழில் சில உள்ளூராட்சி சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும்”

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரு சில உள்ளூராட்சி சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கான சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அதற்கான முயற்சிகளை நாங்கள் கண்டிப்பாக மேற்கொள்வோம் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் பொதிகள் போக்குவரத்து சேவை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது பல்வேறு உள்ளூராட்சி சபைகளில் தீர்மானம் மிக்க சக்தியாக தேசிய மக்கள் சக்தி உள்ளது. ஆட்சியமைப்பது தொடர்பில் பல்வேறு தரப்புகள் எங்களோடு கலந்துரையாடுகிறார்கள்.

இதுவரை காலமும் எங்களுக்கு எதிராக ஓரணியில் திரண்டு தூற்றியவர்கள் எங்களைக் காதலுடன் பார்க்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உருவாக்கப்படவுள்ள எந்தவொரு உள்ளூராட்சி சபை நிர்வாகங்களுக்கும் இடையூறாக நாங்கள் இருக்கமாட்டோம். கடந்த காலங்களில் எங்களைத் தூற்றி இனவாத ரீதியாக தங்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொண்ட எந்தவொரு அணியுடனும் சேரப்போவதில்லை”- என்றார்.

(எ)

# கால்நடை மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு

வவுனியா, ஜூன் 10
வவுனியாவில் அரச கால்நடை மருத்துவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்பு காரணமாக பொது மக்கள் அவதிக்குள்ளாகினர்.

அரச கால்நடை மருத்துவர்களுக்காக தனியான பணி யாப்பு உருவாக்கப்பட்ட போதிலும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை எனக் குற்றம் சுமத்தியதுடன், குறித்த யாப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கால்நடை மருத்துவர்கள் சங்கத்தினர் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக வவுனியா அரச கால்நடை வைத்திய அலுவலகங்களிலும் கால்நடை மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக தங்கள் கால்நடைகளுக்கான மருத்துவ தேவைக்காக வந்த பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை அவதானிக்க முடிந்தது. (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் இராஜாங்க அமைச்சரின் மனைவி சி. ஐ. டியினாரால் கைது!

## வருமான வரி செலுத்தாமையால்

கொழும்பு, ஜூன் 10

**முன்னாள் இராஜாங்க அமைச்சர் தினேஷ் கங்கந்தவின் மனைவி குஷானி நாணயக்கார, நீண்ட காலமாக வருமான வரி செலுத்தாமையால் கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

நீண்ட காலமாக 700 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமான வரி செலுத்தாமையால் குஷானி நாணயக்கார எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

கிரீன் லங்கா டிராவல்ஸ், கிரீன் சீட் லங்கா மற்றும் கிரீன் சிறிலங்கா ஷிப்பிங் ஆகியவற்றின் வர்த்தகரும் பணிப்பாளருமான குஷானி நாணயக்கார, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எச்சரிக்கைகள் விடுத்தும் பல ஆண்டுகளாக வரி செலுத்தத் தவறியுள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பல தடவைகள் விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அறிவிப்புக்களை புறக்கணித்த பின்னர் அவர் மீது சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இருப்பினும், அந்த அறிவிப்புகளை அவர் புறக்கணித்து வருவதால், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்த தொழிலதிபருக்கு எதிராக வருமான வரிச் சட்டத்தின் கீழ் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் எண் 09 இல் வழக்கு தொடர்ந்துள்ளது.

இந்த நீதிமன்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்து, கொழும்பு உயர் நீதிமன்றமும் அவருக்கு மூன்று அழைப்பாணைகளை அனுப்பியுள்ளது.

குஷானி தொடர்ந்து நீதிமன்றத்தைத் தவிர்த்து வந்ததால், அவரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், அவரை உடனடியாக கைது செய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் நேரடியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனை அடுத்து, கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின்போது நாரஹேன்பிட்டியில் உள்ள வீடொன்றில் அவர் கைது செய்யப்பட்டார்.

கைது நடவடிக்கையின் போது வீட்டின் பின்வாசல் வழியாக தப்பிச் செல்ல முயன்ற நிலையில் வீட்டை சுற்றிவளைத்திருந்த பொலிஸாரினால் அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட குஷானி நாணயக்கார நீதி மன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

# "பொது இணக்கப்பாட்டுடன் சபைகளில் எங்கள் ஆட்சி"

கொழும்பு, ஜூன் 10

எதிர்க்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பொது இணக்கப்பாட்டுடன் கொழும்பு மாநகர சபை உட்பட ஏனைய மாநகர சபைகளில் ஆட்சியமைப்போம். மக்களாணையை விளங்கிக் கொண்டு அரசாங்கம் செயற்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டு மக்கள் பெரும்பான்மை பலத்தை வழங்கியுள்ளார்கள்.

ஆகவே ஏதும் செய்ய லாம் என்ற எண்ணத்தில் அர சாங்கம் தான்தோன்றித்தனமாக செயற்பட்டது. அதிகாரம் நிலையற்றது என்பதை மக்கள் ஜனநாயக ரீதியில் அரசாங்கத்துக்கு ஜனநாயக ரீதியில் எடுத்துரைத்துள்ளார்கள்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்தின் பின்னடைவை எடுத்துக்காட்டுகின்றன.

அரசாங்கத்தின் போலியான வாக்குறுதிகளால் ஏமாற்றமடைந்த மக்கள் அரசாங்கத்துக்கு தக்க பதிலடி கொடுத்துள்ளார்கள்.

வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 161 உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் பெரும்பாலான உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் ஆட்சியமைத்துள்ளோம். எதிர்க்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பொது இணக்கப்பாட்டுடன் கொழும்பு மாநகர சபை உட்பட ஏனைய மாநகர சபைகளில் ஆட்சியமைப்போம்.

ஊழலை இல்லாதொழிப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் உறுப்பினர்களை விலைக்கு வாங்கி உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைக்க முயற்சிக்கிறார்கள். மக்களாணையில் அர்த்தத்தை அரசாங்கம் விளங்கிக் கொள்ளவேண்டும்-என்றார். (அ)

# பூஸா சிறைச்சாலையில் சோதனை நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 10

பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது கையடக்கத் தொலைபேசிகள் உட்பட பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, சிறைச்சாலையில் உள்ள சிறைக்கூண்டுகளில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3 கையடக்கத் தொலைபேசிகள், 2 டேட்டா கேபிள்கள், 7 சிம் அட்டைகள், 3 சார்ஜர்கள் மற்றும் 2 ஹெட் செட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பொசன் தானங்களில் பங்கேற்கவேண்டாம்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

கொழும்பு, ஜூன் 10

தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பொசன் தானங்களில் கலந்துகொள்ளல் மற்றும் பொசன் தானங்களை ஏற்பாடு செய்தல் ஆகியவற்றை தவிர்த்தல் வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜூன் 7 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை பொசன் பௌர்ணமி வாரமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 7,021 பொசன் தானங்கள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

பொசன் தானம் வழங்க விரும்புபவர்கள் முதலில் இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தில் பதிவு செய்ய வேண்டும் என அச்சங்கம் தெரிவித்துள்ளது.

பொசன் தானங்களைச் சோதனை செய்யும் பணிகளில் சுமார் 2500 பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளனர். அதிகளவிலான பொசன் தானங்கள் அநுராதபுரம், பொலனறுவை, குருநாகல் மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

அநுராதபுரம் நகரத்தில் இதுவரை 193 பொசன் தானங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# பொகவந்தலாவை வைத்தியசாலை ஊழியர் 6 பேருக்கு சிக்குன்குனியா!

கொழும்பு, ஜூன் 10

பொகவந்தலாவை பிரதேச வைத்தியசாலையில் பணிபுரியும் 6 ஊழியர்களுக்கு ஒரு வாரத்துக்குள் சிக்குன்குனியா நோய் ஏற்பட்டதையடுத்து நேற்று பொகவந்தலாவை பகுதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்களுக்கு புகை விசிறும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன என பொகவந்தலாவை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் ஏ.எஸ்.கே. ஜெயசூரிய தெரிவித்தார்.

சிக்குன்குனியாவால் பாதிக்கப்பட்ட 6 ஊழியர்களும் பொகவந்தலாவை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

ஊழியர்களின் நோய் நிலைமை தொடர்பாக நுவரெலியா மாவட்ட சுகாதார அதிகாரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்தே, அந்த அலுவலக அதிகாரிகளால் நேற்று பொகவந்தலாவை பகுதி முழுவதும் புகை விசிறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. (அ)

# "323 கொள்கலன்களை விடுவித்த அதிகாரிகள் தப்பி செல்ல திட்டம்"

கொழும்பு, ஜூன் 10

கொழும்பு துறைமுகத்தில் இருந்து 323 கொள்கலன்களை சுங்கச் சோதனை இல்லாமல் விடுவித்ததற்கு பொறுப்பான அதிகாரிகள் குழு நாட்டை விட்டு வெளியேற தயாராகி வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

குறித்த அதிகாரிகள் பெல்ஜியம் மற்றும் ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்லத் திட்டமிட்டுள்ளதாகவும், அவர்களுக்கு எதிராக பயணத் தடையைப் பெற குற்றப் புலனாய்வுத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று காலை ஆஜரானபோது உதய கம்மன்பில இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். (அ)

# ரவி குமுதேஷ் பணி இடைநீக்கம்

கொழும்பு, ஜூன் 10

மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் ரவி குமுதேஷ் விதிகளை மீறியதற்காக பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு அறிக்கை யொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த இடைநீக்கம் 10.10.2024 முதல் அமுலுக்கு வரும் என்றும், அவருக்கு சம்பளமோ அல்லது கொடுப்பனவுகளோ வழங்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டு அவர் விதிகளை மீறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் வரை அவர் வெளிநாடு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதி மன்னிப்பு எனும் போர்வையில் முறைகேடு

# சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திடம் 10 மணித்தியாலங்களுக்கு மேல் விசாரணை

கொழும்பு, ஜூன் 10

ஜனாதிபதி பொதுமன்னிப்பு எனும் போர்வையில் கைதிகளை அனுமதியின்றி விடுவித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 10 மணி நேரத்துக்கும் மேலாக விசாரணை மேற்கொண்டுள்ளது.

துஷார உபுல்தெனியவின் இரண்டாவது சுற்று விசாரணை இதுவாகும். கடந்த சனிக்கிழமை அவர் 05 மணி நேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். சில கைதிகளை சட்டவிரோதமாக விடுவிப்பதற்காக ஜனாதிபதி பொதுமன்னிப்பு, தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறி ஜனாதிபதி செயலகம் அளித்த முறைப்பாட்டிற்கமைய இந்த விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் சுவாச நோய்கள் பரவும் வீதம் அதிகரிப்பு!

## சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுமாறு மக்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 10

நிலவும் மழையுடனான வானிலையால் சுவாச நோய்கள் பரவும் வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுவாச நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானம் தொடர்பான விசேட வைத்தியர் அத்துல லியனபத்திரன பொது மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவது பொருத்தமானதென அவர் கூறினார்.

சுவாச நோய்கள் தொடர்பில் முதியோர், கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள், நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டோர் உள்ளிட்ட தரப்பினர் விசேட கவனம் செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்தார்.

நீரிழிவு, சிறுநீரக நோய், புற்றுநோய் உள்ளிட்ட நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டோர் சுவாசத் தொற்றுகளுக்கு உள்ளாகும் போது உடனடியாக சிகிச்சை பெறுவது அவசியமெனவும் அவர் வலியுறுத்தினார்.

சுவாச நோய்கள் ஏற்பட்டுள்ள எந்தவொரு தரப்பினரும் மூச்சு விடுவதில் சிரமம் காணப்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# கவிழ்ந்தது கரும்பு லொறி!



கொழும்பு, ஜூன் 10

சியம்பலாந்துவவிலிருந்து பெல்வத்த சீனித் தொழிற்சாலைக்கு கரும்பு ஏற்றிச் சென்ற லொறி, மொனராகலை கும்புக்கன் சந்திக்கு அருகில் கவிழ்ந்தது.

எதிரே வந்த வாகனத்துக்கு வழிவிட முயன்றபோது கரும்பு சரக்கு ஒரு பக்கமாக சரிந்ததையடுத்து, லொறி கவிழ்ந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தில் லொறியின் சாரதி மற்றும் உதவியாளர் காயமடைந்துள்ளனர். (அ)

# சமல் ராஜபக்ஷவின் மோசடி குறித்து விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 10

மோசடி சம்பவம் தொடர்பாக முன்னாள் சபாநாயகரும் முன்னாள் அமைச்சருமான சமல் ராஜபக்ஷவுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, மேற்படி ஆணைக்குழுவுக்கு அழைத்து அவரிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமக்கு சொந்தமில்லாத சொத்துக்கள், போராட்டக் காலத்தில் அழிவடைந்துள்ளதாக தெரிவித்து, ஒரு கோடிக்கும் அதிகமான நட்டஈட்டை அவர் பெற்றுக்கொண்டுள்ள சம்பவம் தொடர்பாகவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வேறு சம்பவங்கள் தொடர்பாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அவரது புதல்வரான முன்னாள் ஊவா மாகாண முதலமைச்சர் சஷீந்ர ராஜபக் ஷவிடம் கடந்த 5ஆம் திகதி விசாரணைகளை மேற்கொண்டது. (அ)

# இராணுவத்தில் பணியாற்றிவிட்டு சட்ட ரீதியாக விலகிய 45 வயதுக்கு குறைவான 10,000 பேர்

## அவர்களை பொலிஸ் சேவையில் இணைக்க திட்டம்

கொழும்பு, ஜூன் 10

இராணுவத்தில் பணியாற்றிவிட்டு சட்டரீதியாக விலகியுள்ள 45 வயதுக்கு குறைவான 10 ஆயிரம் பேரை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ள திட்டமிட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இவர்களை 5 வருட காலத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

மேலும் கருத்து வெளியிட்ட அமைச்சர், தற்போது போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகக்கூடிய அபாயத்தில் இருக்கும் சுமார் 7 ஆயிரத்து 880 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். (அ)

# பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜூன் 10

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கு அமைய பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவில் இருந்து அதன் விசாரணைப் பிரிவுப் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ். மொஹான் லால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.கே. பண்டார, அம்பாறை பிராந்தியத்தில் இருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.டி. அனுரங்க கல்கிஸை பிராந்தியத்தில் இருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளதுடன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பீ. எல்.ஏ. பிரசன்னவுக்கு எல்பிட்டிய பிராந்தியத்தில் இருந்து நுகேகொடை பிரந்தியத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.பீ. டீ. தீப்தி குமார நுகேகொடை பிராந்தியத்தில் இருந்து எல்பிட்டிய பிராத்தியத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் 08 பேர் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் இருவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (அ)

# இலங்கை ரூபாயின் பெறுமதியில் வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 10

கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 294 ரூபாய் 99 சதம், விற்பனைப் பெறுமதி 303 ரூபாய் 31 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 398 ரூபாய் 53 சதம் , விற்பனைப் பெறுமதி 412 ரூபாய் 58 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 335 ரூபாய் 12 சதம், விற்பனைப் பெறுமதி 347 ரூபாய் 91 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 356 ரூபாய் 36 சதம், விற்பனைப் பெறுமதி 372 ரூபாய் 42 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 214 ரூபாய் 31 சதம், விற்பனைப் பெறுமதி 222 ரூபாய் 75 சதம்.

ஆஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 189 ரூபாய் 98 சதம், விற்பனைப் பெறுமதி 199 ரூபாய் 70 சதம்.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 227 ரூபாய் 44 சதம், விற்பனைப் பெறுமதி 237 ரூபாய் 35 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபாய் 3 சதம், விற்பனைப் பெறுமதி 2 ரூபாய் 11 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 10

வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குகள் கொண்டுவர முயற்சித்த குற்றச்சாட்டில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 28 அட்டைப் பெட்டிகளில் மொத்தம் 7,600 சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் விமான நிலையப் பிரிவின் அதிகாரிகள் குழு மேற்கொண்ட நடவடிக்கையின்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் எலபடகம பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (அ)

# விபத்தில் இருவர் படுகாயம்

கொழும்பு, ஜூன் 10

இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டிய வீதியில் கப்புஹேன்தென்ன சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

வான் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் ஆசிரியர் சங்கம்!

கொழும்பு, ஜூன் 10

தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி இளங்கலைப் பட்டம் பெற்ற ஏராளமானோருக்கு முறையான முறைமை இல்லாமல், அரசாங்கம் ஆசிரியர் நியமனங்களை வழங்கி வருவதாக ஆசிரியர் மற்றும் அதிபர்கள் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

குறித்த நியமனங்கள் தொடர்பாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும் எனவும், இது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக ஜோசப் ஸ்டாலின் கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செம்மணி படுகொலை விசாரணையில் வெளிப்படைத்தன்மை அவசியமானது!

## மன்னிப்புச் சபை வலியுறுத்து

AMNESTY INTERNATIONAL

கொழும்பு, ஜூன் 10

**யாழ்ப்பாணம்- செம்மணிப் பகுதியில் இடம்பெற்ற படு கொலை தொடர்பான விசாரணையின் வெளிப்படைத்தன் மையை இலங்கை முன்வைக்கவேண்டும் என்று மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் மன்னிப் புச் சபை வெளியிட்டுள்ள அறிக் கையில்-யாழ்ப்பாணம், சித்துப்பாத்தியில் உள்ள இரண் டாவது செம்மணி மனித புதை குழி என்று சந்தேகிக்கப்படும் இடத்தில் நடத்தப்பட்ட அகழ் வாராய்ச்சிகளில் இதுவரை 19 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இது இலங்கை உள்நாட்டுப் போரின் போது நடந்ததாகத் தெரிவிக் கப்படும் நீதிக்குப் புறம்பான கொலைகள் தொடர்பான நீண்ட காலமாக தாமதமாகி வரும் உண்மை மற்றும் நீதிக் கான தேடலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

விசாரணையை வழிநடத் தும் நீதித்துறை மருத்துவ அதிகாரி 45 நாள் நீடிப்பு கோரி யுள்ளதாகவும், அடுத்த கட்டத் துக்கான செலவு மதிப்பீட்டை சமர்ப்பிக்க நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பேராசிரியர் ராஜ் சோமதேவாவால் செயற் கைக்கோள் படங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட சந்தேகத்திற்கிடமான அருகி லுள்ள பகுதிகள் ட்ரோன் மூலம் படம் பிடிக்கப்பட்டன. மேலும் அந்த காட்சிகள் பகுப் பாய்வுக்காக அவரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளன. அதற்க மைய அகழ்வாராய்ச்சியின் அடுத்த கட்டம் ஜூன் 26 இல் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட் டுள்ளது.

சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப அகழ்வாராய்ச்சி நடத்தப் படுவதை உறுதி செய்யுமாறு இலங்கை அதிகாரிகளை வலியு றுத்துகிறோம்.

போதுமான வளங்களை ஒதுக்குதல், குடும்பங்கள் மற் றும் ஊடகங்களுக்கான அணுக லுடன் வெளிப்படைத்தன்மை யைப் பராமரித்தல் மற்றும் தளத்தின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல் போன்றவற்றை முன்வைத்து வெளிப்படைத்தன் மையை விளக்கவேண்டும்-என் றுள்ளது. (அ)

# கணவன் தாக்குதல்; மனைவி உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 10

குளியாப்பிட்டி - வல்பி டகம பிரதேசத்தில் பெண்ணொ ருவர் கூரிய ஆயுதத்தால் தாக் கப்பட்டு கொலை செய்யப்பட் டுள்ளதாக குளியாப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 44 வயதுடைய வடுமுன்னேகெதர பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே உயிரி ழந்துள்ளார். கணவருடன் ஏற் பட்ட குடும்பத் தகராறு கார ணமாக மண்வெட்டியைக் கொண்டு கணவன் தாக்கியதில் குறித்த பெண் மரணித்துள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் குளியாப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. 43 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட் டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# முகக்கவசத்துக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்க கோரிக்கை!

கொழும்பு, ஜூன் 10

நாடு ஒரு புதிய நெருக்கடி யான சூழ்நிலையை எதிர் கொள் வதால், முகக்கவசங்கள் மற்றும் கை சுத்திகரிப்பான்களுக்கு உட னடியாக கட்டுப்பாட்டு விலையை விதிக்க வேண்டும் என்று தேசிய நுகர்வோர் முன்னணியின் தலை வர் அசேல சம்பத் குறிப்பிட்டார்.

தற்போதைய சந்தை விலை களின்படி, ஒரு முகக் கவசம் 50 ரூபாவாக உயர்ந்துள்ளதை சுட் டிக்காட்டிய அவர், அறுவைச் சிகிச்சை முகக்கவ சத்தின் விலையை ரூ.10 ஆகக் குறைக்க வேண்டும் என்றும் கோரினார்.

மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பே விலை உயர்வுக் குக் காரணம் என்று உற்பத்தி யாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும், இந்த விடயத் தின் தாமதமின்றி தலையிடுவது அரசாங்கத்தின் பொறுப்பு என்று சம்பத் வலியு றுத்தினார். (அ)

# மாத்தறை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 10

திஹகொட பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மாத்தறை மித்தெ னிய வீதியின் ஹொரொன்துவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

ஹக்மன பிரதேசத்தில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் எதிர் திசையில் வந்த பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் பலத்த காயம டைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மாத்தறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

யட்டியன பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் மாத்தறை வைத்தி யசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# ஓட்டோ திருட்டில் ஈடுபட்டவர் கைது!

கொழும்பு, ஜூன் 10

ஓட்டோ ஒன்றை திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் ஐஸ் போதைப்பொருட்களுடன் ராகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகம பஸ் நிலையத்துக்கு அருகில் நேற்று முன் தினம் பிற்பகல் ராகம பொலிஸ் அதி காரிகள் குழுவினால் நடத்தப் பட்ட சோதனையில் 9 கிராம் 480 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற் றப்பட்டது.

சந்தேகநபர் 26 வயதுடைய கொழும்பு 14 பகுதியைச் சேர்ந்தவராவார்.

சந்தேகநபரிடம் மேற் கொண்ட மேலதிக விசாரணை யில் கடந்த 4 ஆம் திகதி ராகம பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட் டுக்கு அமைய, 1,800,000 ரூபா பெறுமதியுடைய ஓட்டோவை திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் இவரென்பது தெரியவந்தது.

திருடப்பட்ட ஓட்டோ பொலிஸாரினால் கைப்பற் றப்பட்டுள்ளது. ராகம பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கொள்கலன் விடுவிக்கும் செயல்முறையில் எந்தவோர் அழுத்தமும் ஏற்படவேயில்லை!

## சுங்கத் திணைக்களம் கூறுகிறது



கொழும்பு, ஜூன் 10

இந்தக் கொள்கலன்களை விடுவிக்கும் செயல்முறையில் எந்தவொரு மூன்றாம் தரப்பி னரிடமிருந்தும் உத்தரவு அல்லது அழுத்தம் எதுவும் ஏற்படவில்லை. அதை நான் உறுதியாகக் கூற முடியும் என சுங்க ஊடகப் பேச் சாளரும் மேலதிக சுங்கப் பணிப் பாளர் நாயகமுமான சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய கொள்கலன் கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை சுங்கத் திணைக் களம் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியது.

இங்கு கருத்து தெரிவித்த சுங்க ஊடகப் பேச்சாளரும் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக் கொட, குறித்த கொள்கலன்க ளில் சட்டவிரோதமான அல் லது சந்தேகத்திற்கிடமான எது வும் கொண்டு வரப்படவில்லை.

அந்தக் கொள்கலன்களை விடுவிப்பதற்கு முன்னர், இறக் குமதி ஆவணங்களில் உள்ள அனைத்து ஆவணங்களையும் பரிசோதித்து, இந்தக் கொள்க லன்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. சுங்கத் திணைக்களம் பின்பற்றிய நடை முறைகளால், குறித்த கொள்க லன்களில் எந்தவொரு சட்டவி ரோதப் பொருட்களும் இல்லை.

இறக்குமதி செய்யப்பட்ட இந்தக் கொள்கலன்களில், தொழிற்சாலைகளுக்கு தேவை யான மூலப்பொருட்கள், பிளாஸ் ரிக், நூல் வகைகள், இரசாயனப் பொருட்கள், மோட்டார் வாகன உதிரிபாகங்கள், விலங்கு உணவு, இயந்திர வகைகள், பூச்சிக் கொல்லிகள், சீமெந்து, இரும் புக் குழாய்கள், உரம், பலகை போன்றவை தான் இருந்தன.

இந்தக் கொள்கலன்கள் பெரும்பாலும் இந்தியாவிலி ருந்தும் சீனாவிலிருந்தும் இறக் குமதி செய்யப்பட்டவை. இது தவிர, இந்தோனேசியா, ஹொங்கொங், சிங்கப்பூர், மலேசியா, சுவிட்சர்லாந்து, தென் கொரியா, ஐக்கிய அரபு இராஜ்ஜியம் போன்ற நாடுகளி லிருந்தும் இந்தக் கொள்கலன் கள் இறக்குமதி செய்யப்பட்டி ருந்தன.

இந்தக் கொள்கலன்களை விடுவிக்கும்போது நாங்கள் பின்பற்றிய நடைமுறைகளால், இறக்குமதியாளர்கள் சுங்கத் துக்கு அறிவித்த பொருட்கள் மட்டுமே இந்தக் கொள்கலன்க ளில் இருந்தன என நாங்கள் நம் புகிறோம். இந்தப் பொருட்களை விடுவிக்கும் இறக்குமதி ஆவ ணங்களில் உள்ள அனைத்து ஆவணங்களையும் பரிசோதித்த பின்னரே இந்தக் கொள்கலன் கள் விடுவிக்கப்பட்டன.

கடந்த காலத்தில் எங்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் எழுப் பப்பட்டிருந்தன. ஆயுதங்கள் இருக்கலாம், தங்கம் இருக்க லாம், அல்லது போதைப்பொ ருள் இருக்கலாம் என்று கூறப் பட்டது. ஆனால், நாங்கள் பின் பற்றிய இந்த நடைமுறைக ளால், இந்தக் கொள்கலன்களில் அவை எதுவும் இல்லை என நம்பிக்கையுடன் கூற முடியும்.

எவ்வாறாயினும், இது தொடர்பாக பெரும் விவாதம் எழுந்துள்ளதால், இலங்கை சுங்கத் திணைக்களம் இதற்காக ஒரு பிந்தைய தணிக்கை நடத்த முடிவு செய்துள்ளது.

மேலும், நிதி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழு ஒன்று இந்த முழு செயல்முறையையும் விசா ரித்து வருகிறது.

சுங்கப் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அனைத்து அதிகாரி களும் இந்தக் குழுவிடம் சென்று விளக்கங்களை அளித்துள்ள னர். மேலும், குற்றப் புலனாய் வுத் திணைக்களத்துக்கும் நாங் கள் விவரங்களை வழங்கியுள் ளோம். எனவே, எங்களுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

இந்தக் கொள்கலன்களை விடுவிக்கும் செயல்முறையில் எந்தவொரு மூன்றாம் தரப்பி னரிடமிருந்தும் உத்தரவு அல் லது அழுத்தம் எதுவும் ஏற்ப டவில்லை. அதை நான் உறுதி யாகக் கூற முடியும்-என்றார்.

# பாடசாலைகளில் டெங்கு, சிக்குன்குனியாவை தடுக்க புதிய வழிகாட்டல் பத்திரம் வெளியீடு!

கொழும்பு, ஜூன் 10

பாடசாலைகளில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய் களைத் தடுப்பதற்காக எடுக்கப் படவேண்டிய நடவடிக்கை கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத் தும் வகையில், கல்வி அமைச்சு சிறப்பு வழிகாட்டல் பத்திரம் ஒன்றை வெளியிட் டுள்ளது.

விசேட ஆய்வுகளின்போது பாடசாலை வளாகத்தில் நுளம்புகள் பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டால், அந்தப் பாடசாலையின் அதிபருக்கு எதிராக சட்ட நடவடிக்கைக ளும் எடுக்கப்படலாம் என்று குறித்த வழிகாட்டல் பத்திரத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து பாடசாலை வளாகங்களையும் நுளம்புகள் பெருகாதவாறு பரா மரிக்க, பாடசாலைகளின், கல்வி நிலையங்களுக்கு இடையேயும் ஏற்ற வகையில் ... செயற்திட்டமொன்றை உரு வாக்கி செயல்படுத்துவதற்கு இதன்மூலம் பரிந்துரைக்கப்பட் டுள்ளது. இது தொடர்பாக, அனைத்து அரச மற்றும் அரசு அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்கள், பிரிவெனாக்களின் பிரிவெ னாதிபதிகள், தேசிய கல்வியி யல் கல்லூரிகளின் பீடாதிப திகள் மற்றும் மாகாணத்தில் உள்ள ஏனைய கல்வி நிலையங் கள் மற்றும் அலுவலகங்களின் பொறுப்பாளர்களுக்கு அறிவு றுத்தப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு, வாழைச்சேனை

## கடதாசி தொழிற்சாலையால் தற்போது இலாபம் கிடைக்கிறது



மட்டக்களப்பு, ஜூன் 10

**மட்டக்களப்பு, வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை தற்போது இலாபம் ஈட்டி வருவதாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.**

தொழிற்சாலையால் பெற்றுக்கொள்ளப்பட்ட பழைய கடன்களை செலுத்தி நிறைவு செய்துவிட்டு, புதிய உற்பத்தி இயந்திரத்தை கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தனது முகநூல் கணக்கில் ஒரு பதிவை வெளியிட்டு இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும், மட்டக்களப்பு - பாசிக்குடா நகரில் ஒரு விசேட சுற்றுலா நிலையமொன்றை நிறுவ திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(எ)

## மூதூரில் 'கிளீன் சிறீலங்கா' வேலைத்திட்டம் முன்னெடுப்பு


மூதூர், ஜூன் 10

கிளீன் சிறீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திருகோணமலை, மூதூர் கணேசபுரம் குப்பை மேட்டினை அண்டிய காட்டுப்பகுதி சிரமதானம் மூலம் தூய்மைப்படுத்தப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் மூதூர் கிளை, பிரதேச பொது அமைப்புகள் ஒன்றிணைந்து இந்தச் சிரமதானத்தை முன்னெடுத்திருந்தன.

இதன்போது, கடந்த வாரம் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்த வீதிக்கு அருகிலுள்ள காடுகள் வெட்டப்பட்டு சிரமதானம் செய்யப்பட்டது.

இந்தச் சிரமதான பணிக்கு மூதூர் பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் அனுசரணை வழங்கியிருந்தன.




சிரமதான இடத்துக்கு மூதூர் பிரதேச சபை செயலாளர், சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ)

## பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய கூட்டம்

பாண்டிருப்பு, ஜூன் 10

நீதிமன்ற இணக்கத் தீர்மானத்தின்படி வரலாற்று பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய பொதுக்கூட்டம் திட்டமிட்டபடி எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ளது.

சனிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு ஆலய வளாகத்தில் இந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது என திரௌபதி அம்மன் ஆலய மற்றும் மாணிக்கப் பிள்ளையார் ஆலய செயலாளர் அறிவித்துள்ளார்.

நீதிமன்ற தீர்மானத்துக்கமைவாக பகிரங்கமாக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பொதுக் கூட்டத்துக்கு இரண்டு கிழமைகளுக்கு முன்னர் அறிவிப்புகளை சகலருக்கும் வழங்க வேண்டுமென அம்பாறை (கல்முனை) மாவட்ட நீதிபதி, இணக்கத் தீர்ப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ)

## கதிர்காமம் காட்டுப்பாதை 20ஆம் திகதி திறக்கப்படும்

காரைதீவு, ஜூன் 10

கதிர்காமம் ஆடிவேல் விழாவுக்கு செல்லும் யாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் 20ஆம் திகதி திறக்கப்பட்டு, மீண்டும் குறித்த காட்டுப்பாதை ஜூலை மாதம் 04 ஆம் திகதி மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம கூறுகையில்,

கதிர்காமம் மற்றும் உகந்தைமலை முருகன் ஆலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும்.

கதிர்காமத்துக்கு பாதயாத்திரையாக செல்வோர் உகந்தைமலை முருகன் ஆலயத்தில் ஓரிரு நாட்கள் தங்கியிருந்து குமண யால காட்டினூடாக பிரவேசித்து கதிர்காமத்தை சென்றடைவது வழக்கமாகும்.

அந்தவகையில் 20 ஆம் திகதி காலை உகந்தைமலை முருகன் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் ஆரம்ப வைபவத்தை அடுத்து காட்டுப்பாதை காலை ஆறு மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை மாத்திரமே திறந்திருக்குமெனவும் அந்தக் காலப்பகுதிக்குள் மட்டுமே காட்டுக்குள் செல்ல யாத்திரிகர்கள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

தனித்தனியாக அல்லது ஐந்து பேர் சேர்ந்து காட்டுக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். குறைந்தது 15 அல்லது 20 பேர் அல்லது அதற்கும் அதிகமான தொகையினர் சேரும் போது தான் உள்ளே செல்ல அனுமதி வழங்கப்படும் .

அத்துடன் யாத்திரிகர்கள் அனைவரும் தத்தமது அடையாள அட்டைகளை கொண்டு வருவது கட்டாயம்.

இம்முறை ஆலயம் மற்றும் ஆலய சுற்றுச்சூழல் பிரதேசங்களில் சுகாதாரம் தொடர்பான கண்காணிப்புக்கு அம்பாறை, கல்முனை பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைகள் பொறுப்பாக இருக்கும்.

விசேட பாதுகாப்பு மற்றும் அடியார்களுக்கு 24 மணி நேர வைத்திய முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உகந்தைமலை முருகன் ஆலயத்திலிருந்து குமுண யால வனப் பகுதியூடாக பாத யாத்திரிகர்கள் செல்லும் போது யாரும் உணவுப் பொதிகளையும் பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல்களை வழங்க முடியாது எனவும் குடிநீர் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் நீரை வீண் விரயம் செய்ய வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை காட்டு வழியாக யாத்திரிகர்கள் செல்லும் போது பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் பைகளை வீசாமல் செல்லுமாறும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மட்டு. ஏறாவூரில் பழைய இரும்பு கடையில் தீ விபத்து



ஏறாவூர், ஜூன் 10

மட்டக்களப்பு, ஏறாவூர் தாமரைக்கேணி பகுதியிலுள்ள பழைய இரும்புக் கடையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபை தீயணைப்புப் பிரிவு மற்றும் ஏறாவூர் நகரசபை, பிரதேச பொதுமக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீயால் பெரும் தொகையான பொருட்கள் சேதமடைந்தன. தீ பரவல் குறித்து ஏறாவூர் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

## திருக்குளிர்த்தி சடங்கு

காரைதீவு, ஜூன் 10



வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு சிறீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்திச் சடங்கு இன்று நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பகல் பூஜையில் ஆயிரக்கணக்கான அடியார்களுடன் இறுதி நாள் பச்சை கட்டல் சடங்கு மிகவும் சிறப்பாக நடைபெற்றது

நேற்று திங்கட்கிழமை காலை முதல் பக்தர்கள் கற்பூரச் சட்டி எடுத்தல் அங்கப்பிரதட்சணம் போன்ற நேர்த்திக்கடன்கள் செலுத்தினர்.

இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 04.30 மணியளவில் திருக்குளிர்த்தி பாடல் நடைபெறும்.

(எ-08)

## ஆற்றில் தவறி விழுந்த சிறுவன் உயிரிழப்பு!

காத்தான்குடி, ஜூன் 10

மட்டக்களப்பு, காத்தான்குடி ஆற்றில் தவறி விழுந்து 6 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

காத்தான்குடி - 05, பழைய கல்முனை வீதியைச் சேர்ந்த சிறுவனே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் ஆற்றில் தவறி விழுந்து உயிரிழந்தான்.

காலை வேளையில் வீட்டிலிருந்து தனியாக வெளியேறிய சிறுவன், ஆற்றங்கரை பகுதியை நோக்கிச் சென்றதாக கூறப்படுகிறது.

அவ்வேளை, ஆற்றின் கரையில் நின்றபோது தவறி நீரில் விழுந்தான்.

சிறுவன் வீடு திரும்பாமல் இருப்பதைக் கவனித்த பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்களின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில், சம்பவ இடத்தை அண்மித்து பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரீவி கமரா காட்சிகளை பார்வையிட்ட போது, ஆற்றை அண்மித்து அமைந்துள்ள கமராக்களில் சிறுவன் தனியாக நடந்து செல்வது மற்றும் ஆற்றங்கரையை நோக்கிச் செல்லும் காட்சிகள் தெளிவாகப் பதிவாகியிருந்தன.

இதனடிப்படையில், பிரதேச மக்கள், ஆற்றில் தீவிர தேடுதல்களை மேற்கொண்டனர். தேடுதலின்போது, சிறுவன் உயிரிழந்த நிலையில் ஆற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டான்.

குறித்த சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அரசுக்கு எதிராக போராட்டம் ஸ்பெயினில் 50,000 பேர் திரள்வு



மட்ரிட், ஜுன் 10

**ஸ்பெயினில் அரசுக்கு எதிராக தீவிர போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில், சுமார் 50 ஆயிரம் பேர் பங்கேற்றுள்ளனர். பிரதமர் பதவி விலக வேண்டுமென கோஷம் எழுப்பியதுடன், புதிதாக தேர்தல் நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.**

ஸ்பெயினில் சோசலிஸ்ட் தொழிலாளர் கட்சியை சேர்ந்த பெட்ரோ சாஞ்சஸ் பிரதமராக வுள்ளார். சாஞ்சஸ் கட்சியை சேர்ந்தவர்கள் மற்றும் அவருடைய மனைவி, குடும்பத்தினர் எனப் பலரும் ஊழலில் ஈடுபடுகின்றனர் எனக் குற்றச்சாட்டு எழுந்தது. இதில், அவருடைய சகோதரர் ஒருவரும் அண்மையில் சிக்கினார்.

இதுபற்றி வரிசையாக வழக்குகளும் விசாரணைகளும் நிலையில் உள்ளன. இதனால், பிரதமருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. அவருடைய அமைச்சரவையின் முன்னாள் உறுப்பினருக்கும் இதில் தொடர்புள்ளது எனக் கூறப்படுகிறது.

இதனையடுத்து, ஸ்பெயினின் முக்கிய எதிர்க்கட்சியான பாப்புலர் கட்சி சார்பில் நேற்று மட்ரிட் நகரில் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில், ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று பேரணியாக சென்றனர். அப்போது, அவர்கள் பிரதமர் பதவி விலக வேண்டும் எனக் கோஷம் எழுப்பியதுடன், புதிதாக தேர்தல் நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இவர்கள் பேரணியாக சென்றபோது, மாபியா கும்பல் அல்லது ஜனநாயகம் என்ற வாசகம் கொண்ட பதாகையை சுமந்தபடி சென்றனர். ஆளும் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியபடியும் சென்றனர். இந்தப் பேரணியில் 50 ஆயிரம் பேர் திரளாக கலந்து கொண்டனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இதேவேளை, அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளதால் ஸ்பெயினில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# எலான் மஸ்குடனான உறவு முறிந்தது முறிந்ததுதான்

## டொனால்ட் ட்ரம்ப் உறுதி

வாஷிங்டன், ஜுன் 10

எலான் மஸ்க் உடனான உறவுகளை சீர்படுத்தும் எண்ணம் இல்லை. அவருடனான உறவு முறிந்தது முறிந்ததுதான் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்புக்கு முழு ஆதரவாக இருந்தவர் தொழிலதிபர் எலான் மஸ்க். ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியானதும் அமெரிக்க அரசின் செலவினங்களை குறைப்பதற்காக உருவாக்கப்பட்ட துறையை எலான் மஸ்க் கவனித்தார். அமெரிக்க அரசின் பட்ஜெட் தயாரானது. இதில் எலான் மஸ்க் தலைமையிலான குழு பரிந்துரைந்த விடயங்கள் இடம் பெறவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வாஷிங்டனில் தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த ட்ரம்ப், எலான் மஸ்க்கை கடுமையாக விமர்சித்துள்ளார்.



ட்ரம்ப் கூறுகையில், "எலான் மஸ்க் மிகவும் அவமரியாதைக்குரியவர். அவர் வெள்ளை மாளிகையை அவமரியாதை செய்தார். அவரால் நான் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளேன். நான் அவருக்கு நிறைய உதவி செய்திருக்கிறேன். ஜனாதிபதி பதவியை அவமரியாதை செய்ய முடியாது.

வரி குறைப்பு மற்றும் செலவு சட்ட திருத்தங்களுக்கு ஆதரவாக வாக்களிக்கும் குடியரசுக் கட்சியினருக்கு எதிராக போட்டியிட ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கு எலான் மஸ்க் நிதியுதவி செய்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும். எலான் மஸ்க் உடனான உறவுகளை சீர்படுத்தும் எண்ணம் இல்லை. அவருடனான உறவு முறிந்தது முறிந்ததுதான். நான் மற்ற வேலைகளைச் செய்வதில் மிகவும் ஆர்வமாக இருக்கிறேன். அவரிடம் பேசும் எண்ணம் எனக்கு இல்லை"-என்றார்.

(எ)

# தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சி

மதுரை, ஜுன் 10

இந்தியாவில் ஹரியானா, மகாராஷ்டிரா, புதுடில்லியைப் போல 2026 தேர்தலில் தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்திலும் பா. ஜ. க. கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார்.

மதுரையில் பா. ஜ. க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றிய அமித்ஷா கூறுகையில், எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ள முருக பக்தர்கள் மாநாட்டைச் சிறப்பாக நடத்தித்தர வேண்டுகிறேன்.

மதுரை பல்வேறு மாற்றங்களைச் சந்தித்திருக்கிறது. மதுரை மண் தி.மு.க. ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரும் மாற்றத்தை ஏற்படுத்தும். தமிழகத்தில் 2026 தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும். அமித்ஷாவால் தி.மு.கவை தோற்கடிக்க முடியாது என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் சொல்கிறார். நீண்டகால அரசியல் அனுபவம் மூலம் மக்களின் நாடித்துடிப்பை அறிந்தவன் என்ற முறையில் சொல்கிறேன், தமிழக மக்கள் தி.மு.கவை தூக்கி எறியக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

2026 தேர்தலில் பா.ஜ.க. தொண்டர்களின் பணி மிகவும் முக்கியமானது. 2024இல் ஒடிசாவில் பா.ஜ.க. முழு பலத்தோடு ஆட்சி அமைத்தது. ஹரியானாவிலும் பா.ஜ.க. 3ஆவது முறையாக வெற்றி பெற்றுள்ளது. மகாராஷ்டிராவில் இதுவரை இல்லாத அளவுக்கு பா.ஜ.க. வெற்றியைப் பதிவு செய்திருக்கிறது. 2025இல் புதுடில்லியில் அரவிந்த் கெஜ்ரிவால் ஆட்சி அகற்றப்பட்டு, 27 ஆண்டுகளுக்குப்பின் பா.ஜ.க. ஆட்சி அமைத்திருக்கிறது. புதுடில்லியில் பா.ஜ.க. ஆட்சி அமைந்ததுபோல், 2026இல் தமிழகம், மேற்குவங்கத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி மலரப்போகிறது- என்றார்.

(எ)

# கலவரத்தை கட்டுப்படுத்த 2,000 படையினர் குவிப்பு!

## அமெரிக்காவில் பெரும் பரபரப்பு

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜுன் 10

அமெரிக்காவில் கலவரத்தை கட்டுப்படுத்த 2 ஆயிரம் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு பல்வேறு அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். இதன்படி அமெரிக்கர்களுக்கே முன்னுரிமை என்ற கொள்கையை கடைப்பிடிக்கும் அவர் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் அந்த நாட்டைவிட்டு வெளியேறவும் உத்தரவிட்டார்.

இதனையடுத்து அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

இதன்படி கலிபோர்னியா மாகாணம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சில ஊழியர்கள் முறையான ஆவணங்கள் இல்லாமல் தங்கியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர். அங்கிருந்த 44 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இதையடுத்து அவர்களுக்கு ஆதரவாக வெளிநாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். திடீரென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரை கண்டித்தும் அரசுக்கு எதிராக முழக்க மிட்டபடியும் பேரணியாக சென்றனர். இதையடுத்து பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி அவர்களை



கலைக்க முயன்றனர். அவர்கள் மீது தடியடியும் நடத்தினர். இதனால் அந்தப்பகுதியே போர்க்களம் போல காணப்பட்டது. இதற்கிடையே கைது செய்யப்பட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த 44 பேருக்கு ஆதரவாக நேற்று முன்தினம் பொதுமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 2000இற்கும் மேற்பட்டோர் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் பொது சொத்துக்களை சேதப்படுத்தினர். வாகனங்களை தீவைத்து எரித்தனர். அதிகாரிகளையும் தாக்கினர். இதனால் அங்கு பெரும் கலவரம் ஏற்பட்டது.

இதையடுத்து லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கலவரம் பரவுவதை கட்டுப்படுத்த ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடி நடவடிக்கைகளை எடுத்துள்ளார். அவரது உத்தரவின் பேரில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கலவரம் நடந்த பகுதியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கலவரத்தை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

(எ)

# காஸாவுக்குள் நுழைய முயன்றோர் இஸ்ரேல் படையினரால் கைது

ஜெருசலேம், ஜுன் 10

கடல் வழியாக கப்பலில் காஸாவுக்குள் நுழைய முயன்ற சுவீடனை சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரெட்டா தன்பெர்க் கைது செய்யப்பட்டுள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே ஓராண்டுக்கு மேல் போர் நீடித்து வருகிறது. இந்தப் போரில் காஸாவில் 54 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். போர் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில் காஸாவுக்கு இஸ்ரேல் வழியாக நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

இதனிடையே, சுவீடனை சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரெட்டா தன்பெர்க், பிரீடம் புளோட்டிலா மேட்லீன் என்ற பலஸ்தீன ஆதரவு தொண்டு நிறுவனத்துடன் இணைந்து காஸாவுக்கு கப்பலில் நிவாரணப் பொருட்களை கொண்டு செல்வதாக அறிவித்தார். இதன்படி, அந்த கப்பலில் கிரெட்டா தன்பெர்க், பிரான்ஸ் எம். பி. ரிமா ஹசன் உட்பட 12 பேர் பயணித்தனர்.

இத்தாலியின் சிஸ்லி தீவிலிருந்து காஸா நோக்கி புறப்பட்ட இந்தக் கப்பல் நேற்று அதிகாலை இஸ்ரேல் கடற்பகுதி அருகே சென்றபோது இஸ்ரேல் அதிரடிப்படையினர் அதை இடைமறித்தனர்.

கப்பலுக்குள் நுழைந்த இஸ்ரேல் படையினர் அதிலிருந்த கிரெட்டா தன்பெர்க் உட்பட 12 பேரையும் கைது செய்தனர். விளம்பரத்துக்காக கிரெட்டா தன்பெர்க் உட்பட 12 பேரும் இந்த செயலில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டிய இஸ்ரேல் வெளிவிவகாரத்துறை, கைது செய்யப்பட்ட 12 பேரும் இஸ்ரேல் அழைத்து செல்லப்பட்டு அங்கிருந்து அவரவர் சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவர் என்று தெரிவித்துள்ளது.

(எ)

# இம்ரான் கானுக்கு பிணை?

இஸ்லாமாபாத், ஜுன் 10

சிறையில் உள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு நாளை பிணை கிடைக்கும் என்று அவரது கட்சியினர் தெரிவித்தனர்.

ஊழல் குற்றச்சாட்டு உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் தொடர்பில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான் கான், கடந்த 2023ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். தற்போது அவர் ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், பக்ரீத் பண்டிகையையொட்டி இம்ரான் கானை விடுதலை செய்யாவிட்டால் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அவரது கட்சியை சேர்ந்த கைபர் பக்துன்க்வா முதலமைச்சர் அலி அமீன் எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்த மாத தொடக்கத்தில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் கட்சி தலைமையிலான மத்திய அரசை கண்டித்து சிறையில் இருந்தபடியே போராட்டத்தை தலைமையேற்று நடத்தவுள்ளதாக இம்ரான் கான் அறிவித்தார்.

இந்த நிலையில், நாளை 11ஆம் திகதி இம்ரான் கான் பிணையில் விடுவிக்கப்படுவார் என தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் சிரேஷ்ட தலைவர் கோஹர் அலி கான் தெரிவித்தார். இருப்பினும் இது தொடர்பான விரிவான தகவல்கள் எதையும் அவர் வெளியிடவில்லை.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ்: சம்பியனானார் அல்காரஸ்



பாரிஸ், ஜூன் 10

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடரில் கார்லஸ்அல்காரஸ் சம்பியனானார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் போட்டிகள் நடைபெற்று வந்தன. இதில், ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இந்தப் போட்டியில், ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் மற்றும் இத்தாலியின் ஜன்னிக் சின்னெர் விளையாடினர்.

இந்தப் போட்டியில், தொடக்கத்தில் 2 செற்களை கைப்பற்றி சின்னெர் முன்னணியில் இருந்தபோது, அடுத்தடுத்த செற்களை அல்காரஸ் கைப்பற்றினார். இதனால், 5ஆவது செற்றை நோக்கி ஆட்டம் சென்றது. இதில், கடுமையான போட்டி நிலவியது.

இறுதியில், 4-6, 6-7 (4), 6-4, 7-6 (3), 7-6 (10-2) என்ற செற் கணக்கில் சின்னெரை வீழ்த்தி, கார்லஸ் அல்காரஸ் சம்பியன் பட்டம் வென்றார். கிராண்ட்ஸ்லாம் இறுதி போட்டியில் சின்னெர் தோல்வியடைவது இதுவே முதன்முறையாகும்.

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் வரலாற்றில் 5 மணி நேரம், 29 நிமிடங்கள் என இதுவே நீண்ட நேரம் நடைபெற்ற இறுதிப் போட்டியாகும். (எ)

# 4 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி

பிரிஸ்டல், ஜூன் 10

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது ரி - 20 போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி- 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 3 - 0 என இங்கிலாந்து கைப்பற்றியது.

தற்போது இரு அணிகளுக்கும் இடையிலான ரி- 20 தொடர் நடைபெற்று வருகிறது. முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என முன்னிலையில் இருந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ரி- 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 196 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக ஷாய் ஹோப் 49 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக லூக் வுட் 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து 197 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இறுதியில் 18. 3 ஓவர்களில் இலக்கை எட்டி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இங்கிலாந்து தரப்பில் அதிக



பட்சமாக ஜோஸ் பட்லர் 47 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் 2ஆவது ஆட்டத்திலும் வெற்றி பெற்று தொடரை இங்கிலாந்து கைப்பற்றியுள்ளது. 3ஆவது ரி - 20 போட்டி இன்று 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ)

# 3 போட்டிகளில் மட்டும் பும்ரா விளையாடுவார்

மும்பை, ஜூன் 10

இந்திய அணியின் பந்துவீச்சு கூட்டணியை ஜஸ்பிரித் பும்ரா முன்னின்று வழிநடத்தவுள்ளார். இருப்பினும் அவரால் 5 போட்டிகளிலும் விளையாட முடியாது, 3 போட்டிகளில் மட்டுமே விளையாடுவார் என்று தலைமை பயிற்சியாளர் கௌதம் கம்பீர் கூறினார்.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்ததாக இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. 4ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் சுழற்சிக்கு உட்பட்ட தொடர் இது என்பதால் இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

முதல் டெஸ்ட் எதிர்வரும் 20ஆம் திகதி லீட்சில் தொடங்கவுள்ளது. (எ)

# சின்னச்சாமி மைதானத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை

பெங்களூரு, ஜூன் 10

நெரிசலில் சிக்கி 11 பேர் பலியான நிலையில் சின்னச்சாமி மைதானத்தை அகற்ற பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக முதலமைச்சர் சித்தராமையா தெரிவித்தார்.

2025 ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில் சம்பியன் கிண்ணத்தை வென்ற ஆர். சி. பி. அணிக்கு கடந்த 4ஆம் திகதி பெங்களூரு விதானசவுதா முன்பு பாராட்டு விழாவும் சின்னச்சாமி மைதானத்தில் வெற்றிக் கொண்டாட்டமும் நடைபெற்றது. இதில் பங்கேற்க ஆர். சி. பி. ரசிகர்கள் இலட்சக்கணக்கானோர் குவிந்தனர். இதனால் சின்னச்சாமி மைதானத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலியாகினர். இது இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தச் சம்பவத்துக்கு ஆர். சி. பி. அணி நிர்வாகம், கர்நாடக கிரிக்கெட் சங்கமே காரணம் எனக்கூறி கப்பன் பார்க் பொலிஸ் நிலையத்தில் 3 வழக்குகளும் பதிவாகியுள்ளன. இந்த விவகாரத்தில் தங்கள் மீது எந்தத் தவறும் இல்லை என்று முதலமைச்சர் சித்தராமையா கூறிவருகிறார். ஆனால், அரசின் அலட்சியமே 11 பேர் உயிரிழக்க காரணம் என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தை நகரின் மையப்பகுதியிலிருந்து அகற்ற பரிசீலிக்கப்பட்டு வருவதாக கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா தகவல் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், "இதுபோன்ற ஒரு விரும்பத்தகாத சம்பவம் எந்த அரசாங்கத்தின் கீழும் நடக்கக்கூடாது. தனிப்பட்ட முறையில், இந்தச் சம்பவம் என்னையும் அரசாங்கத்தையும் காயப்படுத்தியுள்ளது. இந்த வழக்கில் ஐந்து பொலிஸ் அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். உளவுத்துறைத் தலைவரும் முதலமைச்சரின் அரசியல் செயலாளரும் மாற்றப்பட்டுள்ளனர். அத்துடன் சின்னச்சாமி மைதானத்தை நகரின் மையப்பகுதியிலிருந்து அகற்ற பரிசீலிக்கப்பட்டு வருகிறது"- என்று கூறினார். (எ)

# இறுதியில் தோல்வி சபலெங்கா வேதனை

பாரிஸ், ஜூன் 10


இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தமை மிகுந்த வேதனையளிக்கிறது என்று ரென்னிஸ் வீராங்கனை அரினா சபலெங்கா தெரிவித்தார்.

"கிராண்ட்ஸ்லாம்" என்ற உயரிய அந்தஸ்து பெற்ற பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்றது. இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் கோகோ காப் - அரினா சபலெங்கா மோதினர்.


இதில் கோகோ காப் 6-7 (5-7), 6-2, 6-4 என்ற செற் கணக்கில் சபலெங்காவை வீழ்த்தி முதல் முறையாக பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடரில் சம்பியனானார்.

இந்த நிலையில், இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த பின்னர் அரினா சபலெங்கா அளித்த பேட்டியில் கூறியதாவது,

இந்தத் தோல்வி மிகுந்த வேதனையளிக்கிறது. எனது கரியரில் மிகவும் மோசமான இறுதிப்போட்டி இது. கடந்த இரண்டு வார காலம் முழுவதும் சிறந்த முறையில் ரென்னிஸ் விளையாடினேன். இகா ஸ்வியாடெக் போன்ற சிறந்த வீராங்கனைகளுக்கு எதிராக கடினமான ஆட்டத்தில் விளையாடி இருந்தேன்.



இந்த வெற்றிக்கு கோகோ காப் தகுதியானவர். இருந்தாலும், அரையிறுதியில் என்னை இகா ஸ்வியாடெக் வீழ்த்தியிருந்தால் சம்பியன் பட்டம் வென்றிருப்பார் என நினைக்கிறேன். என்னால் பட்டம் வெல்ல முடியாமல் போனதற்கு மன்னிக்கவும். நிச்சயம் நான் வலுவாக மீண்டு வருவேன்- என்றார். (எ)



# நெய்மருக்கு கொரோனா உறுதி

பிரேசிலியா, ஜூன் 10

பிரேசில் அணியின் நட்சத்திர உதைபந்தாட்ட வீரர் நெய்மருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

உலகம் முழுவதும் மக்களை அச்சுறுத்தி வந்த கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் தலைதூக்கியுள்ளது. இந்த நிலையில் நெய்மருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை சாண்டோஸ் கிளப் உறுதி செய்துள்ளது.

இதனையடுத்து உடனடியாக சக வீரர்களிடமிருந்து தனிமைப்படுத்தி மருத்துவர்களின் கண்காணிப்பில் வைத்துள்ளனர்.

நெய்மருக்கு கொரோனா தொற்று ஏற்படுவது இது 2ஆவது முறையாகும். அவருக்கு இதற்கு முன்பு கடந்த 2021ஆம் ஆண்டும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. (எ)

# போர்த்துக்கல் சம்பியன்

பெர்லின், ஜூன் 10

நேஷன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடரில் போர்த்துக்கல் அணி சம்பியனானது.

நேஷன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடர் ஜேர்மனியில் நடைபெற்று வந்தது. இதில், நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஸ்பெயின் - போர்த்துக்கல் அணிகள் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் இறுதியில் இரு அணிகளும் தலா 2 கோல்கள் அடித்தன. இதையடுத்து பெனால்டி முறையில் வெற்றி நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி, 5- 3 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி கிறிஸ்ரியானோ ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கல் அணி 2ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது. (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோதமாக...

வலியுறுத்துகின்றோம் என நீதி சமாதான நல்லிணக்கத்திற்குமான பணியகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மக்களின் உரித்துக் காணிகளை கையகப்படுத்தி, தனியார் காணிகளுக்குள் அத்துமீறி கட்டப்படும் விகாரைகளை நோக்கி பௌர்ணமி தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் வருகின்ற பௌத்த மதம் சார்ந்தவர்களுக்கு நீதி சமாதான நல்லிணக்கத்துக்குமான பணியகம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

"ஒரு பௌர்ணமி நாளில் ஒரு பகிரங்க வேண்டுகோள்" எனும் தலைப்பில் நீதி சமாதான நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் இயக்குநர் அருட்பணி சூ. யே. ஜீவரட்ணம் அ.ம.தி. வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், யுத்தத்தின் பிற்பாடு ஏறக்குறைய 16 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் தேசிய ஒருமைப்பாட்டையும் இன, மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டிய காலத்தில் இவற்றையெல்லாம் விடுத்து இன்னும் அடக்குமுறைகளும் உரிமை மறுப்புக்களும் தான்தோன்றித்தனமான பொறுப்பற்ற அரசியல் அதிகார வீச்சுக்களும் சிறுபான்மை இன மக்களை நோக்கி அவ்வப்போது செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருப்பது வேதனை அளிக்கின்றது.

கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி காணி நிர்ணய உரிமைச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டிருந்த அரசு வர்த்தமானியானது தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கின்ற நோக்கமாக கொண்டது என்று பல தரப்புக்களும் அச்சம் வெளியிட்டு கண்டனங்களை தெரிவித்தபோது, இறுதியில் அதை இரத்து செய்தமையை வரவேற்கின்ற அதேவேளை, இன்னும் இன மத சமூக நல்லிணக்கத்திற்கு பாதகத்தை விளைவிக்கும் செயற்பாடான தனியார் காணிகளுக்குள் அத்துமீறிய பௌத்த விகாரைகளின் கட்டுமானங்கள் மற்றும் புராதன தொல்பொருள் இடங்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் எந்தவித அகழ்வு மற்றும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள முடியாது என்று சொல்லப்படுகின்ற இடங்களில் பௌத்த விகாரைகளின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்ற சூழ்நிலைகள் மூலம், வெளிப்படையாக மத வேறுபாட்டையும் பிரிவினை மனப்பான்மையையும் அதிகார வர்க்கம் வெளிப்படுத்துகிறது.

இதை வட மாகாண நீதி சமாதான நல்லிணக்கத்திற்கான பணியகம் வன்மையாக கண்டிக்கிற அதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் உரித்துக்காணிகளை கையகப்படுத்தி, தனியார் காணிகளுக்குள் அத்துமீறி கட்டப்படுகின்ற விகாரைகளை நோக்கி பௌர்ணமி தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் வருகின்ற பௌத்த மத சகோதர சகோதரிகளுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோளையும் விடுக்கிறது.

அத்துமீறி அடுத்தவர் காணிகளுக்குள் கட்டப்படுகின்ற மத தலங்களில் ஆன்மீகத்தை தேடுவது அர்த்தமற்றதும் அநியாயமானதும் என்பதை புரிந்து கொண்டும், வட, கிழக்கு மாகாணங்களில் சட்ட விரோத இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மத வழிபாட்டுத் தலங்களை நோக்கி மேற்கொள்ளப்படும் தங்களின் ஆன்மீக பயணங்கள் வேதனயை அளிக்கிறது. நல்மனதோடு அவற்றை தவிர்த்து தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரித்து அவர்களுக்குரிய காணிகளை மீள ஒப்படைக்க முயற்சிப்பதும் உங்களுடைய கடமை என்பதையும் வலியுறுத்துகிறோம்.

அது மாத்திரம் இன்றி, தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யக்கூடிய வளமான நிலங்கள், காணிகள் எல்லாம் இராணுவ கட்டுப்பாட்டுக்கு கீழ் உள்ள நிலையில், அவற்றை எல்லாம் விடுவிக்க வேண்டிய தேவைப்பாடு உணரப்பட வேண்டிய சூழ்நிலையில், இப்படியான காணி அபகரிப்பு செயற்பாடுகள் தடை செய்யப்பட வேண்டும் என்பதையும் நீதி சமாதான நல்லிணக்கத்திற்குமான பணியகம் வலியுறுத்த விரும்புகிறது-என்றுள்ளது.

## ஐந்து பேர்...

குடும்பத்தினர் பொலிஸாரிடம் தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதனையடுத்து, அவர்களை மண்டபம் மறுவாழ்வு மையத்தில் தங்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தமிழ் அரசு...

இல்லத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற கட்சியின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபைக்கான மேயர், துணை மேயர் தெரிவுகள் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தையிட்டியில்...

தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி நேற்று திங்கட்கிழமையும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. திஸ்ஸ விகாரைக்கு எதிராக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தையிட்டி மக்களாலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இதனிடையே, இன்றைய தினம் முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் குழப்பங்கள் ஏற்படலாம் என்பதால், கலகம் அடக்கப் பயன்படுத்தப்படும் தண்ணீரை வீசியடிக்கும் வாகனம் அங்கு நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், கலகமடக்கும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

இதேசமயம், விகாரைக்கு எதிராக போராட்டம் செய்வதற்கு தடை கோரி பலாலி பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. உட்பட 27 பேருக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

பதில் பொதுச்செயலாளர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோரை ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், அதன் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமியும் நல்லூரில் சீ. வீ. கே. சிவஞானத்தின் இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

வன்னியில் வவுனியா மாநகர சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபைகளில் தங்கள் தரப்பு நிர்வாகத்தை அமைப்பதற்கு ஆதரவு வழங்கும்படி ரெலோ தரப்பினர் இந்தச் சந்திப்பின்போது தமிழ் அரசுக் கட்சியிடம் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளின் விடயத்தில் ரெலோ கட்சியும் அது சார்ந்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் எப்படி நடந்து கொள்கின்றனவோ, அதே முறைமையில் வன்னியில் பதில் தரப்படும் என தமிழை அரசுக் கட்சியின் பதில் தலைவரும் பதில் பொதுச்செயலாளரும் ஒரே நிலைப்பாடாக உறுதியாக ரெலோ பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளனர் எனக் கூறப்பட்டது.

அந்தந்தச் சபைகளில் அதிக இடங்களைப் பெற்ற கட்சி ஆட்சி அமைப்பதற்கு உதவும் முன்னைய பகிரங்க அறிவிப்பை ரெலோவும், அது சார்ந்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் பின்பற்றுமானால் அதே முறைமையைத் தமிழ் அரசும் தவறாது பின்பற்றும். அந்த முறைமைக்கு மாறான போக்கை ரெலோ உட்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி யாழ். மாவட்டத்தில் பின்பற்றுமானால், அதேபோல் மாறான முறையைத் தமிழ் அரசுக் கட்சி வன்னியில் பின்பற்றும் என்று தமிழ் அரசின் இரு தலைவர்களும் உறுதிபடத் தெரிவித்தார்கள் என அறியப்படுகிறது. (அ)

## டக்களஸை...

ஒன்றிணைந்து அமைக்கப்பட்ட கிழக்கு தமிழ் கூட்டமைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் படகு சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்கள் சத்திய பிரமாணம் எடுக்கும் நிகழ்வு மட்டு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட கருணா உரையாற்றுகையில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாணம் மூவினங்களும் செறிந்து வாழும் இடம். எனவே தமிழ் மக்கள் ஆகிய நாங்கள் ஒற்றுமையாக செயற்படாமல் விட்டால் நிச்சயமாக ஒரு தமிழ் முதலமைச்சரை உருவாக்க முடியாது. ஆகவேதான் கிழக்கு தமிழர் கூட்டமைப்பை உருவாக்கி அனைத்து கட்சிகளையும் ஒன்றிணையுமாறு கேட்டுள்ளோம்.

இதில் பதவி ஆசை, பட்டம் போன்றவற்றுக்காக செயற்படுவதாக இருந்தால் கிழக்கு மாகாணம் பறிபோவது என்பது உறுதியான விடயம். இதனை மக்கள் உணர்ந்து கொண்டிருக்கின்றனர்.

வட மாகாணத்தை எடுத்து கொண்டால் இன்று ஆட்சி அமைப்பதற்காக எதிரும் புதிருமாக இருந்த கஜேந்திரகுமாரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்தது. அவ்வாறே டக்ளஸ் தேவானந்தாவை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் சந்தித்துள்ளார். அதற்கு பல விமர்சனங்கள் நடக்கின்றன. அதில் வேடிக்கையான விடயம் ஒட்டுக்குழுத் தலைவரை சந்தித்ததாக.

அவரும் மக்களுக்காக-போராட்டத்துக்காக ஆயுதம் தூக்கி வந்த தலைவர் தான். அவர் பல வருடங்களாக பாராளுமன்றத்தில் இருந்து சேவையாற்றியவர். ஆகவே, ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும். சிவஞானம் துணிந்து சென்று டக்ளஸுடன் பேசி ஆட்சி அமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டமையை வரவேற்கின்றோம். இதுபோன்று எதிர்காலத்தில் நாங்கள் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டும் என்பது தான் எங்களது வேண்டுகோள்.

அதைத்தான் கிழக்கு மாகாணத்தில் எதிர்பார்கின்றோம். வேடிக்கை என்ன என்றால், யுத்தம் நடந்த காலத்தில் யுத்தத்தை விமர்சித்தவர்கள் அல்லது யுத்தத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் தற்போது தேசியவாதிகளாக மாற்றமடைந்துள்ளார்கள். அவர்கள்தான் தேசியத்தை பற்றி அதிகமாக பேசுகின்றனர். உண்மையில் களத்தில் இருந்த போராளிகள் இன்று துரோகிகள் ஆக்கப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

## ரணில்...

நாட்டுக்குள் மருந்துகளை இறக்குமதி செய்வது தொடர்பாக கெஹலிய ரம்புக்வெல முன்னர் குற்றப் புலனாய்வுத் துறைக்கு முறைப்பாடு அளித்திருந்தார். முந்தைய அரசாங்கத்தின் பல அமைச்சர்கள் ஏற்கனவே அந்த முறைப்பாடு தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையிடம் தங்கள் வாக்குமூலங்களை அளித்துள்ளனர்.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளதாக குற்றப் புலனாய்வு பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## பணி இடைநிறு...

ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட துஷார உபுல் தெனிய இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, துஷார உபுல்தெனிய குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் நேற்று முன்தினம் 10 மணி நேரமும் சனிக்கிழமை 5 மணி நேரமும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாணவர்களுக்கு...

மாணவர்களில் மூவர் நேற்று முன் தினம் இரவு கைதுசெய்யப்பட்டு, அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மரத்தளபாட திருத்த வேலை செய்யும் வர்த்தக நிலையத்தை நடத்தும் 45 வயதான வர்த்தகர் ஒருவரிடம் இருந்து போதை மாத்திரைகள் பெற்றுக்கொள்வது தெரியவந்தது.

இந்த நிலையில் நேற்று குறித்த வர்த்தகர் 330 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, அவர் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பது தெரியவந்துள்ளது.

குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், தான் ஐஸ் போதைக்கு அடிமையானவர் எனவும், போதை மாத்திரைகளை பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தில், ஐஸ் போதைப்பொருளைப் பெற்று பாவித்து வருவதாகவும் பொலிஸாரிடம் குறிப்பிட்டுள்ளார். (அ)

## காணி அமைச்...

எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என காணி நிர்ணய கட்டளை சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் கடந்த மார்ச் 28 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2430 எனும் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும், அந்த வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக இரத்துச் செய்யவேண்டும் எனக்கோரி வலுப்பெற்ற எதிர்ப்பை அடுத்து, அந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அதனை இரத்துச் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் தற்போதுவரை வெளியிடப்படவில்லை.

இதேபோன்று, பிரதமருக்கும் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின்போது காணி அமைச்சர் லால்காந்தவால் வாக்குறுதியளிக்கப்பட்டவாறு கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின்போது இந்த விவகாரம் பற்றி எந்தவொரு விசேட கூற்றும் வெளியிடப்படவில்லை.

இந்த வர்த்தமானி அறிவித்தல் எப்போது இரத்துச் செய்யப்படும் என்று திகதியொன்றை அறிவிக்குமாறு குறுந்தகவல் ஊடாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் தான் கோரினார் என்றும், இதுபற்றி பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் (நேற்றைய தினம்) பேசுவார் எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த சனிக்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, இந்த விடயம் தொடர்பில் காணி அமைச்சர் லால்காந்தவுடன் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தனது குறுந்தகவலுக்குப் பதில் அனுப்பியுள்ளார் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் பிரதமரின் செயலாளருக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவரும் இதுகுறித்து உடனடியாக ஆராய்வதாக உறுதியளித்துள்ளார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அநுராதபுரம் சிறை அத்தியட்சகர் கைது!

## ஜனாதிபதியின் பொது மன்னிப்பை சட்டவிரோதமாக பயன்படுத்தினாரா?

கொழும்பு, ஜூன் 10

**அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் நேற்று முன் தினம் குற்றப் புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.**

ஜனாதிபதியின் பொது மன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி கைதிகளை விடுவித்தமை குறித்த விசாரணை தொடர்பாக இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

4 மில்லியன் ரூபாவை மோசடி செய்து தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒரு பிரதிவாதியை விடுவிக்க உதவிய குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டார்.

சம்பந்தப்பட்ட கைதி ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளதாக, சம்பந்தப்பட்ட அத்தியட்சகர் வட மத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எழுத்துபூர்வமாக அறிவித்துள்ளார்.

அதன்படி, நீதிமன்றத்தால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட டபிள்யூ.எம். அதுல திலகரத்ன என்ற பிரதிவாதி, மே 12 ஆம் திகதி வெசாக் பௌர்ணமி நாளில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சிறைச்சாலை அத்தியட்சகரின் அறிக்கைகளைக் கருத்தில் கொண்டு, வடமத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி லக்மாலி ஹேவாவசம், சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான அனுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சகர், அனுராத புரம் பிரதான நீதிவான் முன்னிலை யில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். (அ)

## 2029 ஜனாதிபதி தேர்தலில் ஹரிணி பொது வேட்பாளர்?

### காய் நகர்த்துகின்றாரா ரணில்?

கொழும்பு, ஜூன் 10

2029 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டங்களை தீட்டி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்தி பிரதமர் பதவியில் இருந்து ஹரிணி அமரசூரியவை நீக்கிவிட்டு, மேலதிக நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்தவோ அல்லது பிரதமர் பதவியில் மாற்றங்களை ஏற்படுத்தவோ, அரசாங்கம் எவ்விதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, கடந்த வார அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

எனினும், 2029 ஆம் ஆண்டு பொது வேட்பாளராக தற்போதைய பிரதமர் ஹரிணி அமரசூரியவை நியமிப்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பும் ஹரிணி அமரசூரிய தரப்பினரும் எவ்விதமான கலந்துரையாடல்களிலும் ஈடுபடவில்லை என்பதும் தெரியவந்துள்ளது. (அ)

## மாகாண மட்டத்தில் இனி குற்ற புலனாய்வு பிரிவு!

### அமைச்சர் ஆனந்த விஜயபால



கொழும்பு, ஜூன் 10

மாகாண மட்டத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவுகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் துறைக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் மீதான விசாரணைகளை விரைவுபடுத்தும் நோக்கில் மாகாண மட்டத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவுகளைத் திறக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

வடமத்திய மாகாண குற்றப் புலனாய்வுப் பிரிவுகளைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

அதன்படி, எதிர்காலத்தில் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஒவ்வொரு மாகாண மக்களும் மாகாண மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவுகளுக்கு வழங்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணைகளை மேலும் திறம்படச் செய்வதும், அந்தத் துறைக்கு வரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதும், மாகாண மட்டத்தில் தொடர்புடைய விசாரணைகளைத் தொடங்குவதும் இந்த விசாரண்ணைப் பிரிவுகளை நிறுவுவதன் முக்கிய நோக்கமாகும் என்று அவர் தெரிவித்தார். (அ)

## கைதாவாரா ஹரீன்?



கொழும்பு, ஜூன் 10

விளையாட்டு, இளைஞர் விவகாரங்கள் மற்றும் சுற்றுலாத் துறை முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்ணாண்டோ விரைவில் கைது செய்யப்பட வாய்ப்புள்ளதாக செய்தி கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் காலியில் நடைபெற்ற கண்காட்சி மற்றும் இசை நிகழ்ச்சியில் நிதி முறைகேடுகள் நடந்ததாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பில் ஹரின் கைது செய்யப்படலாம் என தெரியவந்துள்ளது.

இளைஞர்களை ஒடுக்குமுறையில் இருந்து விடுவித்தல் என்ற தலைப்பில் காலி சமனல மைதானத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய "ஸ்மார்ட் யுத்" கண்காட்சி மற்றும் இசை நிகழ்ச்சிக்கு அமைச்சரவை ஒப்புதல் பெறுவதற்கு முன்பு 31,417,778 ரூபாய் பணத்தை சுற்றறிக்கைகளை மீறியும் பயனற்ற முறையிலும் செலவிட்டதாக தணிக்கை அறிக்கையில் தெரியவந்துள்ளது.

ஸ்மார்ட் யுத் கண்காட்சி மற்றும் இசை நிகழ்ச்சி 2024ஆம் ஆண்டு ஜூன் 14 மற்றும் 15 ஆகிய திகதிகளில் நடைபெற்றன.

மேலும் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பும், அமைச்சரவை முடிவு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு தெரிவிக்கப்படுவதற்கு முன்பும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் 2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதியன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.

மேலும் இது குறித்து 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த கண்காட்சி மற்றும் இசை நிகழ்ச்சியை நடத்துவதில் முறைகேடுகள் நடந்ததாக பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ விரைவில் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட உள்ளதாகவும் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ)

## பொது பயன்பாடு ஆணைக்குழுவின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் அரசு!

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 10

மின்சாரக் கட்டணத் தீர்மானத்தில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீன தலையீடு தடுக்கப்பட்டுள்ளது என முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள மின்சார சபை (திருத்தச்) சட்டமூலத்தில் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை முழுமையாக பலவீனப்படுத்தும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவின் அதிகாரங்களை நிதியமைச்சு மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு பொறுப்பாக்கும் முயற்சிகள் இந்த சட்டமூலத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மின்சார கட்டண தீர்மானத்தில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீன தலையீடு தடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபை 2015 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டது.

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் எரிபொருள் மற்றும் மின்சாரத்துக்கு விலை நிர்ணயம் கொண்டு வரும் யோசனையை கொண்டு வந்தேன். இந்த யோசனைக்கு நிதியமைச்சு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

எரிபொருள் ஊடாக கிடைக்கும் வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காகவே நிதியமைச்சு கட்டண நிர்ணயத்துக்கு அன்று எதிர்ப்பு தெரிவித்தது. அதன் பிரதிபலனை இன்று எதிர்கொள்ள வேண்டியுள்ளது- என்றார். (அ)

## மின்சார கட்டண திருத்தம்: இந்த வாரம் இறுதி முடிவு!

கொழும்பு, ஜூன் 10

முன்மொழியப்பட்ட மின்சார கட்டண திருத்தம் குறித்த இறுதி முடிவு இந்த வாரம் அறிவிக்கப்படும் என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்ட கட்டண திருத்தம் குறித்து நடைபெற்ற பொது ஆலோசனை செயல்முறையின் போது பெறப்பட்ட 500 இற்கும் மேற்பட்ட எழுத்து மற்றும் வாய்மொழி சமர்ப்பிப்புகளை மதிப்பாய்வு செய்த பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும்.

பொது மக்களின் சமர்ப்பிப்புகளை அவற்றை மதிப்பாய்வு செய்யும் செயல்முறை கடந்த வாரம் நிறைவடைந்ததாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜெயநாத் ஜெயநாத் ஹேரத் கூறினார். (அ)

## மகிந்தானந்த அளுத்கமகே நேற்று உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு!

கொழும்பு, ஜூன் 10

கொழும்பு மேல் நீதிமன்ற விசாரணையில் 20 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்ததை எதிர்த்து முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு கரம் பலகைகளை இறக்குமதி செய்ததன் மூலம் அரசுக்கு ரூபா 53 மில்லியன் இழப்பை ஏற்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டுகளின் பேரில் அளுத்கமகேயுக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து அவரது சட்டத்தரணி நேற்று மேன்முறையீடு செய்தார்.

மே 29 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம், முன்னாள் விளையாட்டு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயுக்கு 20 ஆண்டுகளும், முன்னாள் லங்கா சதோச தலைவர் நளின் பெர்னாண்டோவுக்கு 25 ஆண்டுகளும் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது.

2015 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் விளையாட்டு உபகரணங்களை இறக்குமதி செய்தது தொடர்பான ஊழல் வழக்கில் இருவருக்கும் தண்டனை விதிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.